முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.4.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் மற்றும் மத்தியக் குழு உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன் ஆகியோர் சந்தித்து, மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக தீர்ப்பளித்ததையொட்டி வாழ்த்துத் தெரிவித்து, மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24-வது மாநாட்டில் கலந்து கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தவ்ஜித் ஜமாத் கட்சியின் மாநிலத் தலைவர் ஆர்.அப்துல் கரீம், மாநிலப் பொருளாளர் ஏ. இப்ராஹீம், மாநிலத் துணைத் தலைவர் கே. தாவூத் கைஸர், மாநிலத் துணை பொதுச் செயலாளர் ஏ.கே.அப்துல் ரஹீம், மாநிலச் செயலாளர் ஐ.அன்சாரி ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசு அறிமுகம் செய்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நேற்று (10.4.2025) தலைமைச் செயலகத்தில், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் அவர்கள் தான் எழுதிய "Leo The Untold Story of Chennai Super Kings" என்ற புத்தகத்தை வழங்கினார்.

கழக ஆட்சியில்

கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் எண்ணற்ற பணிகள்!

பேரவையில் பா.ஜ.க. உறுப்பினரின் உண்மைக்கு மாறான கூற்றை மறுத்து - அமைச்சர் கே.என்.நேரு புள்ளி விவரங்களுடன் விளக்கம்!

சென்னை, ஏப். 11 - சட்டப் பேரவையில், நேற்று முன்தினம், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பா.ஜ.க. உறுப்பினரும் கோவை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசன் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்ட உண்மைக்கு மாறாக மறுத்து அமைச்சர் கே.என். நேரு, கோவை தெற்கு தொகுதியில் நடைபெற்று வரும் பணிகளை புள்ளி விவரங்களுடன் பட்டியலிட்டார்.

அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டதாவது:

உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசுகிறபோது, முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கோவைக்கு வந்து பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறார்கள். ஆனால், அந்த அறிவிப்பு, அறிவிப்பு அளவிலேயே இருக்கிறது. எந்தப் பணியும் முன்னேற்றமில்லை என்று சொன்னார்கள். மேலும், multilevel car parking அந்தப் பகுதியிலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதையும் வேண்டுமென்று சொன்னார்கள்.

அவருடைய தொகுதியில் மட்டும் 2021 ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரை இந்த நான்காண்டு காலத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சொல்கிறேன்.

பணிகளுடைய விவரம். சாலைப்பணிகள் திட்டம் மொத்தம் எடுத்துக் கொண்ட பணிகள் 1,017. அதற்கான செலவு 8,341 இலட்ச ரூபாய். முடிவுற்ற பணிகள் 935. நடைபெற்றிருக்கின்ற பணிகள் 33. இன்னும் எதிர்ப்பார்க்கின்ற பணிகள் 49.

அதேபோல, சாலைப் பணிகள் பொது நிதியிலிருந்து 60 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 623 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முடிவுற்ற பணிகள் 53. நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் 7. கட்டடங்கள், 197 கட்டடங்கள் கிட்டத்தட்ட 7,632 இலட்சத்திற்கு 122 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 35 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மழைநீர் வடிகால்கால் 86 இடத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. 1,648 இலட்சம் ரூபாய். 69 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 17 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தூர் வாருதல், மழைநீர் வடிகால் மற்றும் ஓடைகள் 43 பணிகள். 264 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றில் 40 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 3 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம்கூட, எங்கள் பகுதியிலே பூங்காக்கள் வேண்டுமென்று நீங்கள் கேட்டீர்கள். ரூ.9,639 இலட்சம் மதிப்பீட்டில் 14 பூங்காகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 8 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 6 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட ரூ.2,101 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. 2 கோடி ரூபாய் செலவில் தெருவிளக்குகள் மாற்றப்பட்டிருக்கின்றன. குடிநீர் விநியோகம் மற்றும் ஆழ்குழாய் கிணறு பணிகளைப் பொறுத்தவரையில் 110 பணிகள் ரூ.1,577 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 102 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 8 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 66 பணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ரூ.6,718 இலட்சம் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் 57 பணிகள் முடிவுற்றிருக்கின்றன. 9 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்றவை 159 பணிகள்,

ஆக மொத்தம், எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் 1,758, கிட்டத்தட்ட ரூ.350 கோடி 41 இலட்சம் மதிப்பீட்டில் உங்கள் தொகுதியில் மட்டும் இந்த பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'Multilevel car parking குறித்து சொல்லி இருக்கிறார்கள். அதையும் கவனத்தில் வைத்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு விளக்கமளித்தார்.

தமிழ்நாட்டில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் சாலைப்பணிகள் நடைபெறுகின்றன!

முண்டியம்பாக்கம் - ஒரத்தூர் பிரிவு சாலை அருகே உயர்மட்ட மேம்பாலம்!

பணிகள் விரைந்து நிறைவுறும்! பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, ஏப். 11- சட்டப்பேரவையில், மயிலம் தொகுதி உறுப்பினர் ச.சிவக்குமார் கொண்டு வந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளித்த பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு "சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் முண்டியம்பாக்கம் - ஒரத்தூர் பிரிவு சாலை அருகே தேசிய நெடுஞ்சாலையில் உயர் மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி விரைவில் முடிவுறும்" என்று அறிவித்தார்.

சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் NH-45 முண்டியம்பாக்கம் ஒரத்தூர் பிரிவு சாலை அருகே தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்படும் உயர்மட்ட மேம்பாலத்தை விரைந்து முடிக்க வேண்டுமென்பது குறித்து சட்டப்பேரவையில் உறுப்பினர் ச.சிவக்குமார் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதற்கு பதிலளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது :-

சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை (NH45) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இச்சாலையில், முண்டியம்பாக்கம்-ஒரத்தூர் பிரிவு சாலை கி.மீ. 154/280 மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி எதிரில் கி.மீ. 154/730 (Black Spot ID No. TN-92-01&TN (02) 074) இரண்டு விபத்து பகுதிகளையும் இணைத்து விபத்து தடுப்பு நடவடிக்கைக்காக (Black Spot Improvement) வாகன சுரங்கப் பாதை 5.5 மீ. உயரத்திலும் (VUP) மற்றும் இலகுரக வாகன சுரங்கப்பாதை 4.5 மீட்டர் உயரத்திலும் (LVUP) அமைக்க ரூ.41.53 கோடி மதிப்பீட்டில் 1-8-2023 அன்று ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 29-8-2023 அன்று பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், சேவை சாலைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சேவை சாலைப்பணி முடிந்ததும், போக்குவரத்து மாற்றம் செய்து VUP பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த சாலை என்பது சென்னையிலிருந்து திருச்சிக்கு போகிற தேசிய நெடுஞ்சாலை ஆணையம் NHAI-ன் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இந்த இடத்திலே black spot, அதாவது விபத்து ஏற்படும் என்கிற அடிப்படையில், தமிழக அரசின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டுதான், இப்போது அந்த விபத்துகளை தடுப்பதற்காக 5.5 மீட்டரும், சிறு வாகனங்கள் செல்வதற்காக 4.5 மீட்டருக்கும் 42 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தம்கூட கோரப்பட்டு விட்டது. ஆனால், அந்த பாலத்தை கட்ட வேண்டுமென்று சொன்னால், அது heavy traffic உள்ள area என்பதால் வருகிற வாகனங்கள் எல்லாம் செல்வதற்கு Service Road போட வேண்டியிருக்கிறது. எனவே, அந்த Service Road போடுவதற்குரிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த சேவை சாலை பணிகள் முடிந்த வுடனே, traffic-யை இரு புறங்களாக மாற்றியமைக்கப்பட்டு, அந்த சுரங்கப்பாதை விரைந்து கட்ட வேண்டுமென்று தொடர்ந்து அந்த NHAI ஆணையத்தினுடைய R.O. Regional Authority என்று சென்னையில் ஒருவர் இருக்கிறார். அவரிடம் தொடர்ந்து தொலைபேசியில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். Service Road பணிகள் முடிந்தவுடனே, அந்தப் பால பணிகள் விரைந்து நடைபெறும்.

கூட்டேரிப்பட்டு நான்கு முனைச் சந்திப்பு

மயிலம் சட்டமன்ற உறுப்பினர் முதன்முதலில் சட்டமன்றத்திற்கு வந்த உடனே, அவர்தான் கூட்டேரிப்பட்டு கூட்டு ரோட்டில் நான்கு முனை சந்திப்பு இருக்கிறது அங்கு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டார். இப்படி திண்டிவனம், விழுப்புரத்திற்கு இடைப்பட்டிருக்கிற மயிலம் தொகுதியில் இருப்பதெல்லாம் அவர்தான் பட்டியல் போட்டார். அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், ஒன்றிய அரசாங்கத்திற்கு தொடர்ந்து கடிதம் அனுப்பி அதை வலியுறுத்தினோம். அவையெல்லாம் நெடுஞ்சாலைத் துறையில் அடிக்கடி விபத்து நடைபெறும் பகுதி, black spot பகுதி, அதனால், அங்கெல்லாம் மேம்பாலம் கட்ட வேண்டுமென்று வலியுறுத்தியதன் அடிப்படையில் தான் இப்போது ஒப்பந்தங்களெல்லாம் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்களும் அந்த வழியாகத்தான் போகிறோம். நீங்களும் அந்த வழியாகத்தான் போக வேண்டும். வனத் துறை அமைச்சர் அவர்களும் அந்த வழியாகத்தான் போகிறார்கள். எனவே, அதை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். ஒப்பந்ததாரர்களின் காலம் என்று ஒன்று இருக்கிறது. அந்த ஒப்பந்தக் காலத்திற்கு முன்னால் அது நடைபெறுவதற்கு வலியுறுத்துகிறோம். அந்த ஒப்பந்தக் காலத்திற்குள் முடிப்பதற்கு வேண்டிய முன் எடுப்புகள் இந்த அரசின் சார்பாக எடுக்கப்படும்.

இன்னொன்றையும் சொன்னார்; 234 தொகுதிகளுக்கும் நெடுஞ்சாலைத் துறை பற்றிய சாலைகள் எல்லாம் equal-ஆக சமமாக தர வேண்டுமென்று சொன்னார். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் தொடர்ந்து சொல்லியிருக்கிறேன். தமிழ்நாட்டிலிருக்கிற தரைப்பாலங்கள் எல்லாம்-- ஒரு தரைபாலம் இருக்கிறதென்று சொன்னால் பொதுவாக தரைப் பாலங்கள் எல்லாம் கிராமங்களிலிருந்து நகரத்தை இணைப்பதுதான். மழைக்காலங்களில் பார்க்கும்போது, குழந்தைகள் 14, 15 நாட்களாகக்கூட பள்ளிக் கூடத்திற்கு போக முடிவதில்லை.

இதையெல்லாம் உணர்ந்த காரணத்தினால் தான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் சமமாக எண்ணிய காரணத்தில்தான், 1200-க்கு மேற்பட்ட தரைப் பாலங்களை எல்லாம் உயர் மட்ட பாலங்களாக்கப்பட்டு, அவைகளெல்லாம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது ஒன்று. இன்னொன்று, ஒன்றிய சாலைகள், ஊராட்சி சாலைகள் எல்லாம் எடுத்து தரம் உயர்த்த வேண்டுமென்று அவர் ஆணையிட்டதன் அடிப்படையிலே, ஏற்கெனவே ஏறத்தாழ 4,000 கிலோ மீட்டர், 234 தொகுதிகளிலும் எந்தப் பாகுபாடுமில்லாமல், இந்த நிதியாண்டிலேகூட 1,000 கிராமச் சாலைகளை தரம் உயர்த்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவு அளித்திருக்கிறார்கள். அதனால் இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு இவர், அவர் என்று பார்க்காமல் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் சமமே என்ற அடிப்படையில்தான் இந்த நெடுஞ்சாலைத் துறையின் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

திருப்பூரில்

சாயப்பட்டறை பொது சுத்திகரிப்பு நிலையம் கொண்டு வந்தது, கலைஞர் அரசு!

சட்டப் பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விளக்கம்!

சென்னை, ஏப். 11- சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் திருப்பூர் தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் கே.என். விஜயகுமார் பேசியபோது குறுக்கிட்டு விளக்கமளித்த, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், "திருப்பூரில் சாயப்பட்டறை பொது சுத்திகரிப்பு நிலையம் கொண்டுவரப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்!" என்று விளக்கமளித்தார்.

சட்டப் பேரவையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறிப்பிட்டதாவது:-

திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.என்.விஜயகுமார் பொது சுத்திகரிப்பு நிலையம் பற்றி, அதாவது, சாயப் பட்டறையினுடைய பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு தங்களுடைய ஆட்சியிலேதான் நிதி ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே பதிவு செய்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருக்கிறபோது மாநில அரசின்மூலம் 120 கோடி ரூபாயும், ஒன்றிய அரசின்மூலம், அன்றைக்கு மத்திய சென்னையினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்தபோது, அவர்களும் அங்கே பேசி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, டாக்டர் மன்மோகன் சிங் அரசு ரூ.200 கோடியும் தந்தது. ஆக 320 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்தார்கள். சிக்கண்ணா கல்லூரியில் பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கான வங்கிக்கான காசோலையை அனுப்பி வைக்கிற நிகழ்ச்சி நடைபெற்றது. அது உண்மை என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே பதிவு செய்கிறார்கள்.

அதேபோல உறுப்பினர் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி இங்கே சொன்னார்கள். குடிநீர்ப் பிரச்சினை மிக விரைவிலே சரியாகப் போகிறது. மேட்டுப்பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே இன்னும் ஒரு தடுப்பணை பாக்கி இருக்கிறது. சமீபத்தில், நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரிலே சென்று ஆய்வு செய்திருக்கிறோம். விரைவாக, தண்ணீர் வரத்து குறைந்தவுடன், அந்தப் பணியையும் செய்து, நிச்சயமாக, மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் திருப்பூரிலே நடைபெறும். இது உண்மை.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சி.வி.எம்.பி.எழிலரசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், மிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் வி. முத்துக்குமார், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.